திரு. ப. பொன்னுரங்கம் : பாயின்ட் ஆஃப் ஆர்டர். இது என்னுடைய தொகுதியைப் பற்றியது..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து ஆரம்பித்ததற்குப் பின்னாலே எழுப்பாதீர்கள். என்னுடைய பதிலைக் கேளுங்கள். தாங்கள் நின்று கொண்டு பேசுவதைப் பார்த்தால் 'நான் உட்காரவே மாட்டேன்' என்று நிற்பீர்கள், அப்படித் தானே (குறுக்கீடு) தாங்கள் வற்புறுத்த முடியாது. உட்காருங்கள். திரு. ஆறுமுகம் படிக்கட்டும், பிறகு பாருங்கள்....

(முற்பகல் 10-40)

7. கவன ஈர்ப்புகள்.

(அ) வடசென்னை காசிமேடு பகுதியிலுள்ள குடிசைகள் கடலரிப்பால் பாதிக்கப் பெற்றுள்ளமை.

திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ''வட சென்னை காசிமேடு பகுதியில், கடலரிப்பால் மீனவர்கள் குடிசைகள் அடித்துச் செல்லப்படுவதால், மீனவ குடும்பங்களின் உடமைக்கும் தொழிலுக்கும் சேதம் ஏற்படுதல்'' என்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையை மாண்புமிகு உணவு அமைச்சர் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, வடசென்னை காசிமேடு பகுதியில் கடலரிப்பு அநேகமாக ஆண்டுதோறும் நிகழ்ந்து வருகிறது. ஆனால் இம்மாதிரி கடலரிப்பு ஏற்படுவதற்குச் சரியான காரணங்கள் இவைதான் என்று குறிக்க முடியாது.

இப்பொருள், பொறியியல் பணித்துறை அலுவலர்கள் மற்றும் பூண்டி நன்னீர் உயிரியல் ஆய்வுக் கூட அலுவலர்கள் ஆகியோர் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. கடலரிப்பு பற்றிய காரணங்களை நன்கு ஆராயாமலும், இதைத் தடுப்பதற்குத் தொழில் நுட்பம் வாய்ந்த திருப்திகரமான திட்டத்தை வகுக்காமலும், பெரும் நிதி செலவிடுவது உசிதமல்ல என்று முடிவெடுக்கப்பட்டது. இக்கூட்டத்தில், இப்பொருள் குறித்து சில ஆராய்ச்சிகளை ஏற்கனவே மேற்கொண்ட, பூனேவில் உள்ள, மத்திய நீர் மற்றும் சக்தி ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பப்பட வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டது. எனினும், மேலும் கடலரிப்பு ஏற்படாமல் தடுக்க, இப்பகுதியில் சென்னை துறைமுக பொறுப்புப் கழகத்தால், கற்பாறைகள் கொட்டப்படுகின்றன. வடசென்னையில் கடலரிப்பைத் தடுப்பதற்கு, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி பொதுப் பணித்துறை ஆராய்ந்து வருகிறது.

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1978 செப்டம்பர் 12

கடலரிப்பு ஏற்பட்டு அதனுல் நிலம் கடலால் கொள்ளப் படும் சமயங்களில், இப்பகுதியில் வாழும் மீனவர்கள் பத்திர மான பகுதிக்கு அப்புறப்படுத்தப்படுகிறுர்கள். இவர்கள் மாற்றிடங்களில் குடிசைகளை அமைத்துக் கொள்ள ஒவ்வொரு குடிசைக்கும் ரூ. 50 வீதம் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். இங்கே கேள்வி நேரத்தைக் கூட சுருக்கிக் கொண்டீர்கள், காரணம் நேரம் வேண்டும் என்பதற் காக. நான் 41-வது விதியின்கீழ் ஒரு கால் அட்டன்ஷன் நோட்டீஸ் கொடுத்திருந்தேன். இது என்னுடைய தொகுதி யைச் சேர்ந்தது. இந்த இடத்தில் கடல் அரிப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லை. பக்கத்தில் உள்ள ராதாகிருஷ்ணன் நகரில், எனது அருமை நண்பர் ஐசரிவேலன் தொகுதியிலும், சிகாமணி தொகுதியிலும் கடல் அரிப்பு ஏற்படுகின்றது என்பதைப் பற்றி கால் அட்டன்ஷன் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். இங்கே இல்லாத ஒன்றைப் பற்றிச் சொல்லுகிறுர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை அந்த உறுப்பினர் தான் எழுப்ப வேண்டும். அதுதான் உரிமை. கடல் அரிப்பு இருக்கிறதா இல்லையா என்பதைத்தான் அமைச்சர் சொல்ல வேண்டும். உங்களுடைய பிரச்னை நாளை வருகிறது.

திரு. மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறக்கூடிய நேரத்தில் ஆண்டு தோறும் இந்தக் கடல் அரிப்பு ஏற்படுவதாகக் கூறியிருக்கிறுர்கள். கடல் அரிப்பு ஒவ்வொரு ஆண்டும் ஏற்படுவதால், நூற்றுக் கணக்கான குடும்பங்கள் தங்கள் வீடுகளை இழந்து நடுத்தெருவில் வாழ்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. காசிமேடு 23-வது வட்டத் தைச் சேர்ந்த, சீனிவாச நகர், மாயாண்டி நகர், அண்ணு நகர், பூங்காவனக் குப்பம், பல்லவன் நகர் போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் 500-க்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வீடுவாசல்களை இழந்து நடுத்தெருவில் நின்று கொண்டிருக்கிறுர்கள். அது மட்டுமல்ல, தங்கம்மாள் குடியிருப்பு என்ற பகுதியில் மீனவர் களுக்காகக் கட்டப்பட்டுள்ள வீடுகளில், தற்போது மீனவர்கள் அடையாளச் சீட்டு இல்லாதவர்கள் வசித்துக் கொண்டிருக் கிறுர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; தயவு செய்து குறைத்துக் கொள்ளுங்கள். இதில் தாங்கள் பேசுவதற்கு வாய்ப்பில்லை. சுருக்கமாகக் கேளுங்கள்.

1978 செப்டம்பர் 12]

திரு. மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, 1978-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 11-ம் நாளன்று ஏற்பட்ட கடல் அரிப்பின் காரணமாக நூற்றுக்கணக்கான குடும்பங்கள் நடுப்பாதையிலே வசித்துக் கொண்டிருக்கிறார்கள். பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் இருந்த காலத்தில், இந்தக் காசிமேடு பகுதி கடல் அரிப்பால் சேதமடையாமல் இருக்கும்பொருட்டு, பலமான சுவர் எழுப்பினார்கள்....

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆண்டுதோறும் கடல் அரிப்பு ஏற்படுகிறது என்று சொல்லவில்லை. அநேகமாக ஆண்டு தோறும் ஏற்படுகிறது என்றுதான் சொன்னேன். இருந்தாலும் கடல் அரிப்பைத் தடுப்பது என்பது இயற்கையை எதிர்த்துப் போராடுவதற்குச் சமமாகும். ஆகவே இப்படிப்பட்ட கடல் அரிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கொடுக்கத் தான் அரசாங்கத்தாலே ஏற்பாடுகளைச் செய்ய முடியும். தடுப்புச் சுவர் கட்டும் கருத்து அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை. காரணம் பலகோடி ரூபாய்கள் செலவு செய்ய வேண்டிய சூழ் நிலை இருக்கிறது. இருந்தாலும் அரசு இந்த நிலையை உன்னிப் பாக கவனித்து வருகிறது.

(ஆ) அபிஷேகபுரம் பகுதியிலுள்ள தனியார் பள்ளி ஒன்றின் நிர்வாக நிலை.

திரு. கோ. இளங்கோவன் :
திரு. கூ. ச. முருகேசன் : பேரவைத் தலைவரவர்களே, "திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் ஒன்றியம், அபிஷேகபுரம் பேரூராட்சி எல்லைக்குள் அமைந்த 'அலெக்ஸ்' தனியார் தொடக்கப்பள்ளியினை நிர்வாகம் தொடர்ந்து நடத்தாததால் ஆசிரியர்களும் மாணவர்களும் அவதியுறுகின்றனர்" என்ற அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை மாண்புமிகு கல்வி அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

திரு. என். கிட்டப்பா : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், இங்கே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் காணோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் வந்து விட்டார்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்தில், அபிஷேகபுரம் பேரூராட்சி சுந்தர் நகரில், திரு. அடைக்கலராஜ் என்பவரால்